அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.18/2001

எனது இல : அ/1அ/1/26
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு
சுதந்திர சதுக்கம், கொழும்பு.07
2001.08.22

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்

**அரச சேவையின் இடமாற்றம் பற்றிய கொள்கை**

நாடளாவிய சேவைகள்,இணைந்த சேவைகள், மாகாண அரச சேவைகள் மற்றும் திணைக்களச் சேவைகள் ஆகிய சேவைகளைச் சேர்ந்த அலுவலர்களின் இடமாற்றம் பற்றிய பொதுக்கொள்கையொன்று இருக்க வேண்டுமென்று அரசு தீர்மானித்துள்ளது.அதன்படி உச்ச கால எல்லையான 05 வருடங்கள் ஒரே பதவியில்/சேவை நிலையத்தில் சேவையாற்றி உள்ள ஒவ்வொரு அலுவலருக்கும் வேறு பதவிகளில்/நிலையங்களில் சேவையாற்ற இடமளிக்கும் வகையில் உடனடியாக இடமாற்றங்கள் வழங்க வேண்டி உள்ளன.

02. சில சேவைகள்/திணைக்களங்கள்/மாகாண சபைகள் போன்ற நிறுவனங்கள் தமக்குக் கீழ் சேவையாற்றுகின்ற அலுவலர்கள் தொடர்பில் தற்போது இடமாற்ற முறைகளை நடைமுறைப்படுத்துவதாக தெரியவருகிறது. இச் சந்தர்ப்பத்தில் அத்தகைய இடமாற்ற முறைகளில் திருத்தங்கள் செய்யப்படமாட்டாது. எவ்வாறாயினும் ஆரம்ப நடவடிக்கையாக அரசு தற்போது முடிவு செய்துள்ள இடமாற்றக் கொள்கையானது 2002.01.01 ஆந் திகதியிலிருந்து அமுல்படும் வண்ணம் நாடளாவிய சேவைகள் தொடர்பில் மட்டும் செயற்படுத்தப்பட வேண்டும்,

03. மேலே 01 ஆம் பந்தியில் கீழ் காட்டப்பட்டுள்ள இடமாற்றக் கொள்கையை 2002.01.01 ஆந் திகதி தொடக்கம் செயற்படுத்துமாறு தற்போது நாடளாவிய சேவைகளை நிர்வகிக்கும் ஒவ்வொரு சபைகளும் அமைச்சுக்களின் செயலாளர்களும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஒப்பம் : எம்.என்.ஜுனைட
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு